2012 ஏப்ரல் 4]

ஏறக்குறைய ரூ.37.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடம் கட்டும் பணி துவக்குவதாக அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் சிதம்பரம் தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

50—

இருவழிப் பாதை

***6257—திரு. மு. அருண் சுப்பிரமணியன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் செல்லும் மலைப் பாதையை இருவழிப் பாதையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் நிருவாகம் இணை ஆணையர் / செயல் அலுவலராலும் மற்றும் தக்காராலும் கவனிக்கப்பட்டு வருகிறது. இதன் ஆண்டு வருமானம் ரூ.16,09,71,192/– ஆகும். திருமுருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் ஐந்தாம்படை வீடாகத் திகழும் சிறப்பு பெற்ற இத்திருக்கோயில் 270 அடி உயரம் கொண்ட பெரிய குன்றின்மீது அமைந்துள்ளது. மலைக்கோயிலுக்குச் செல்லும் பாதை 1,600 மீட்டர் நீளம் கொண்டது. இம்மலைப் பாதை குறைந்தபட்ச அகலம் 7.20 மீட்டர் முதல் அதிகபட்ச அகலம் 15 மீட்டர் வரை கொண்டதாகும். இப்பாதை இருவழிப்பாதை கொண்ட சாலையாகும். மாண்புமிகு

[2012 ஏப்ரல் 4

தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய அரசின் 2011–2012 ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவை அறிவிப்பின்படி ரூ.90.00 இலட்சம் மதிப்பீட்டில் இச்சாலையைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன் முதல் கட்டமாக தார்ச் சாலையாக இருக்கும், இப்பாதையினை கான்கிரீட் சாலையாக மாற்றலாம் என்ற மாவட்ட நிருவாகத்தின் பரிந்துரையின்படி மேற்காணும் பாதையிலுள்ள மண்ணைப் பரிசோதனை செய்ய நெடுஞ்சாலைத் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த மண் பரிசோதனை ஆய்வுக் குறிப்பு வந்தவுடன் பாதையைப் புதுப்பிப்பது குறித்து மேல்நடவடிக்கை தொடரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.

திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் மலைப் பாதைக்குச் செல்லும் வழியாகத்தான் காஞ்சிபுரம், திருவண்ணாமலை மாவட்டங்களுக்குச் செல்லும் கனரக வாகனங்கள் மற்றும் அரசு, தனியார் வாகனங்கள் செல்கின்றன. அதற்காக மலையைச் சுற்றி, மலையடிவாரத்தில் புறவழிச் சாலை அமைத்திட நிலம் அளந்து கல் நடப்பட்டுள்ளது. நில எடுப்பு சட்டத்தின்படி நிலங்களைக் கையகப்படுத்தி, விரைவில் புறவழிச் சாலை அமைத்திட ஆவன செய்ய தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது நெடுஞ்சாலைத் துறை சம்பந்தப்பட்ட கேள்வி. ஆகவே, இதற்கு தனிக் கேள்வி போடவும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இதுகுறித்து மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கு தனிக் கேள்வி போடவும். வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு :** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

ALONE TRIUMPHS